
## திராவிடத்தால் வாழ்கிறோம்

998

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

32

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# பட்டதாரிகளை உருவாக்கிய ‘பூஞ்சோலை’!

பொள்ளாச்சி கா.க.புதூரில் சாதியத்தின் பிடியைத் தளர்த்தும் கருவியாகக் கல்வி இருந்ததும், அந்தக் கல்வியை ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் பணியை, ‘தாய்த் தமிழ்ப் பள்ளி’ செய்ததும் ஆதிக்கவாதிகளுக்கு எரிச்சலைத் தந்தது. பள்ளிக் கூடம் இருந்தால்தானே படிப்பார்களென 2001, ஜூலை 22-ஆம் நாள் நள்ளிரவில் பள்ளிக்கூடத்தைத் தீ வைத்து கொளுத்தினர். ஆனால், எரிந்தது என்னவோ வெறும் கொட்டகை மட்டும்தான். தாய்த்தமிழ்ப் பள்ளியின் நோக்கமோ, குழந்தைகள் - பெற்றோரின் கல்விக் கனவோ அந்தத் தீயில் சாம்பலாகிவிடவில்லை.

ஜூலை 24-ஆம் தேதியே பள்ளி மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. ஊர்க்கவுண்டர் பொன். காளீஸ்வரன் பள்ளியைச் சீரமைக்க எல்லா உதவிகளும் செய்தார். அதன்பிறகு, பூஞ்சோலை கல்வி அறக்கட்டளை முளைத்தது. சாந்தி, தமிழ்ச்செல்வி பிரபாகரன் என 2 பெண்கள் மாலை நேர வகுப்புகள் எடுத்தனர். பெண் குழந்தைகளின் கல்விக்குக் கூடுதல் முக்கியத்துவம் தந்தனர். கடந்த கால் நூற்றாண்டில் 200-க்கும் மேற்பட்டோர் பூஞ்சோலையில் இருந்து பட்டதாரிகளாக உருவெடுத்துள்ளனர்.



3 தெருக்களை மட்டுமே கொண்ட கா.க.புதூரில் இருந்து ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், வங்கி, ரயில்வே பணியாளர்கள் எனப் பல்வேறு துறைகளில் 100-க்கும் மேற்பட்டோர் இப்போது பணியாற்றி வருகின்றனர்.

கா.க.புதூரில் இப்போது சாதியத்தின் பிடி தளர்ந்துள்ளது. ஊரும் சேரியும் இடைவெளி இல்லாமல் இணைந்துள்ளன. பண்ணைக் கூலிகளின் குடும்பத்தில் இருந்து பல பட்டதாரிகள் உருவாகியுள்ளனர். பூஞ்சோலையை உருவாக்கிய காசு நாகராசன் எனது சித்தப்பாதான். பெரியார், அண்ணா பற்றிய வரலாறுகளைச் சொல்வார். புத்தகங்கள் வாசிக்கச் சொல்வார். அதனால் கல்வியோடு சேர்ந்து அரசியல் அறிவையும் நாங்கள் பெற்றோம். வரும் காலங்களில் இன்னும் பெரும் மாற்றங்கள் எங்கள் ஊரில் நிகழும்.



-வெ.கிருபாநந்தினி, உயிரியலாளர்.

கல்வி - வேலைவாய்ப்பு வழிகாட்டி முகாம்கள், போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள பயிற்சி முகாம்களும் நடத்தப்படுகின்றன. திறன் வளர்ப்பு பயிற்சி முதல் ஐ.ஏ.எஸ். பயிற்சி வரை வழங்கும் வகையில், பூஞ்சோலை அறக்கட்டளை பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது. பூஞ்சோலை முன்னாள் மாணவர்கள் இணைந்து யாழிசை கல்வி உதவி அறக்கட்டளை ஒன்றைத் தொடங்கி, கல்லூரி மாணவர்களுக்குக் கட்டண உதவி செய்து வருகின்றனர்.

இவற்றையெல்லாம் விட, மிக முக்கியமாக, மாணவர்கள் மத்தியில் பகுத்தறிவுச் சிந்தனையையும், அறிவியல் மனப்பான்மையையும் பூஞ்சோலை வளர்க்கிறது. ஆனால், ஊரில் இருந்த பிற்போக்குவாதிகள் சிலரோ, மக்களை ஆன்மிகத்தின் பக்கம் திருப்பினால், பகுத்தறிவுச் சிந்தனையில் இருந்து விலக்கி வைத்துவிடலாம் என எண்ணினர். கோயில்களில் வாரா வாரம் அன்னதானம் வழங்கும் முயற்சியை 2000-த்தின் தொடக்கத்தில் தொடங்கினர்.

அந்த சமயத்தில் காசு நாகராசனும் அவரது நண்பர்களும் பெரியார் திராவிடர் கழகத்தில் இணைந்து செயல்படத் தொடங்கியிருந்தனர். கல்விப் புரட்சியோடு இணைந்து பண்பாட்டுப் பிரச்சாரமும் தொடர்ந்தது.

‘பக்தி என்பது தனிச்சொத்து, ஒழுக்கம் என்பது பொதுச்சொத்து, மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு’ என சுவர்களில் எழுதி வைத்தனர். அடுத்த வாரத்தில் இருந்து மக்கள் அன்னதானம் வாங்கச் செல்வது குறைந்தது. ஒரு மாதத்தில் அன்னதானம் வழங்குவதே நின்றுபோனது. அதேபோல, ஊரில் மழை பொழிய வேண்டும் என்பதற்காக விநாயகர் சிலைக்குத் தண்ணீர் ஊற்றும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தனர்.

**‘சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு’**

என்ற குறளையும், அதற்கான விளக்கத்தையும் சுவர்களில் எழுதி விழிப்பு உணர்வு ஏற்படுத்தினர். மறுநாள் பொதுமக்கள் எவரும் தண்ணீர் ஊற்ற செல்லவே இல்லை. மாற்றுக் கொண்டாட்டங்களுக்கும் மக்களைத் தயார்படுத்தினர்.

...பயணிப்போம்.

## அரசியல் சட்டத்தை அறிதல் – அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பயிற்சி!

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம், அறிவியக்கப் பணிகளில் பல புதிய முயற்சிகளைச் செய்து வருவதை அறிவோம். செந்தமிழ்ச் சிற்பிகள் உரையரங்கம், செயற்கை நுண்ணறிவுப் பயிற்சிகள் ஆகியவை சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளன. அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறையும் பொது நூலக இயக்ககமும் இணைந்து அரசியலமைப்புச் சட்டத்தை அறிந்து கொள்ளும் வகுப்பினை நடத்தவுள்ளன. சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 16 வயதுக்கு மேல் உள்ளவர்கள் பங்கு பெறும் வகையில், இந்த சட்ட வகுப்பு நடைபெற உள்ளது.




‘நமது அரசியல் அமைப்பு, அன்றாட வாழ்க்கைக்காக இந்திய அரசியல் சட்டத்தை அறிதல்’ என்கிற தலைப்பில், முன்னாள் நீதிபதி கே.சந்துரு அவர்கள் இந்த வகுப்பினை நடத்த உள்ளார். 25.10.2025 முதல் ஆறு வாரங்கள் (சனி மற்றும் ஞாயிறு) என மொத்தம் 12 நாட்கள் இந்த வகுப்பு நடைபெற உள்ளது. காலை 11 மணி முதல், மதியம் 1 மணி வரை வகுப்பு நடைபெறும். இந்த வகுப்பில் 16 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பங்கேற்கலாம். கட்டணமில்லா இந்த வகுப்புக்கு, வருகையைப் பதிவு செய்ய இந்த இணைப்பினை ஸ்கேன் செய்து தகவல்களைப் பதிவு செய்யவும்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரின் அதே உற்சாகம், ஊக்கம்!



கேபிள் சீனு (எ) சீனிவாசன்

1984-ஆம் ஆண்டு, ஆயிரம்விளக்கு தொகுதி, ஆலையம்மன் கோயில் தெரு இளைஞர் மன்றச் செயலாளராக இருந்தேன். அந்த ஆண்டில்தான், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், இளைஞர் அணிச் செயலாளராக முதல் முறையாகத் தேர்தல் களம் இறங்கினார். அப்போது, எங்கள் பகுதியில் ஒருநாள், ஒவ்வொரு வீடாக, குடிசைப் பகுதி மற்றும் குடிசை மாற்றுவாரிய அடுக்குமாடி வீடுகள் என சுமார் 120 வீடுகளில், தலைவர் தளபதி அவர்கள் ஏறி இறங்கி வாக்கு சேகரித்தார். அப்போது எடுக்கப்பட்ட படம் இது. தலைவர், இன்றும் அதே உற்சாகத்துடன் கழகப் பணியாற்றுவது மிகுந்த ஊக்கத்தை அளிக்கிறது.

**– கேபிள் சீனு (எ) சீனிவாசன், மாவட்ட வர்த்தகர் அணித் தலைவர், சென்னை தென்மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

82

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''

# மக்களுடன் களத்தில் நிற்கும் கழக வீரர்கள்!





**மழை நீர் வடிகால் பணிக்காக 4 ஆயிரம் கோடி ரூபாயை, தி.மு.க. அரசு செலவழித்த பிறகும், மழை நீரை வடியச் செய்வதற்காக முதலமைச்சர், துணை முதலமைச்சர் மற்றும் தி.மு.க. ஆட்சியாளர்கள் நேரடியாகக் களமிறங்க வேண்டிய அவசியம் என்ன என்று நெட்டிசன்கள் கேட்கிறார்களே?**

தென்மேற்குப் பருவக் காற்று, வடகிழக்குப் பருவக் காற்று என்று இருவித பருவங்கள் இருக்கின்றன என்பதை இந்த நெட்டிசன்களில் எத்தனை பேர் அறிவார்களோ? தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கடலோர மாவட்டங்களிலும் உட்புற மாவட்டங்களிலும் அதிக மழை தருவது வடகிழக்குப் பருவம்தான். அதில் வெறும் மழை மட்டும் பொழிவதில்லை, காற்றழுத்தத் தாழ்வு மண்டலங்களும் தோன்றும். அவை புயல் சின்னமாகவும் மாறும். புயல் கரையைக் கடக்கும்போது மழையுடன் வெள்ளமும் ஏற்படும். இந்த இயற்கைச் சீற்றங்களை எவரும் துல்லியமாகக் கணக்கிட முடியாது. அதுமட்டுமின்றி, காலநிலை மாற்றம் மற்றும் புவி வெப்பமடைதலால் பருவக் காற்றுக் காலங்களில் சாதாரண மழைப் பொழிவைத் தாண்டி, மேக வெடிப்பின் மூலம் ஒரு மாத காலத்தில் பெய்ய வேண்டிய மழை, ஒரே நேரத்தில் கொட்டித் தீர்க்கிறது. இத்தகைய மழையின்போது அமைந்தகரை மட்டுமல்ல, அமெரிக்காவே திண்டாடுவதைக் காட்சிகளாகப் பார்க்கிறோம்.

சென்னை மற்றும் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் முந்தைய அ.தி.மு.க. ஆட்சியின் 10 ஆண்டுகளில் எந்தவித முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்காத நிலையில், தி.மு.க ஆட்சி அமைந்த பிறகு அவற்றைச் சரிசெய்யும் வகையில், மழை நீர் வடிகால்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தினால் முதன்மைச் சாலைகளில் மழைநீர் தேங்கும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளது. தீபாவளிக்கு வெளியூர் சென்றவர்கள், மீண்டும் சென்னைக்குத் திரும்பும்போது மறைமலைநகர் முதல் சென்ட்ரல் ரயில் நிலையம் வரை எந்த இடத்திலும் தண்ணீர் தேங்காமல் எளிமையான பயணத்தை மேற்கொள்வதைக் காண முடியும். அதுபோலவே 100 அடி சாலைகள் போன்ற ஒவ்வொரு பகுதியிலும் உள்ள முதன்மைச் சாலைகளிலும் தண்ணீர் தேங்குவதில்லை. எனினும், ஒவ்வொரு பகுதியிலும் உட்புறச் சாலைகள் சிலவற்றில் தண்ணீர் தேங்குவதை அறிந்து, மாநகராட்சி ஊழியர்கள் களத்துக்குச் செல்கின்றனர்.

ஏரிகள் நிறைந்த பகுதிகளே சென்னையின் வளர்ச்சிப் பகுதிகளாக மாறியதால், இயல்பாகவே தண்ணீர் ஓட்டம் அந்தப் பகுதிகளை நோக்கிச் செல்கின்றது. அதனையும் சரி செய்வதற்கான நீண்டகால திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், உடனடி நிவாரணமாக மோட்டார் பம்புகள் கொண்டு தண்ணீர் வெளியேற்றப்படுவதை உறுதி செய்வதற்காக முதலமைச்சரும் துணை முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் தி.மு.கழக நிர்வாகிகளும் நேரடியாகக் களமிறங்கி, மழை நேரத்திலும் மக்களின் பக்கம் நிற்கிறார்கள்.

என்ன நடந்தது என்பதை டி.வி.யைப் பார்த்துத்தான் தெரிந்துகொண்டேன் என்ற முன்னாள் முதல்வரின் கட்சிக்காரர்களுக்கும், மக்களையும் ஊடகங்களையும் நேரில் சந்திக்கத் தயங்கும் ஒன்றிய ஆட்சியின் கட்சியினருக்கும், அவர்களின் புதிய அடிமையாகியுள்ள பண்ணை வீட்டை விட்டு வெளியே வராதவரின் கட்சியினருக்கும் வடகிழக்குப் பருவமழையின் தன்மையும் தெரியாது, ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் 75 ஆண்டுகளாக மக்களுடன் எல்லா நேரத்திலும் நிற்கும் தி.மு.க.வின் ஆற்றலும் புரியாது..

...வினா தொடரும்.

## மலரும் நினைவுகள்

### தேர்தலில் பங்கேற்க அங்கீகாரம்!

1956-ஆம் ஆண்டு, டிசம்பர் 28-ஆம் தேதி, சேலத்தில் கூடிய தி.மு.க. பொதுக்குழு, தேர்தலில் பங்கேற்க வேண்டும் என்ற திருச்சி மாநாட்டின் முடிவுக்கு அங்கீகாரம் அளித்தது. மறுநாள் கூடிய பொதுக்குழுவில் வியூகங்கள் வகுக்கப்பட்டன. என்.வி.நடராசன் தலைமையில், கழகத் தேர்தல் அறிக்கையைத் தயாரிக்க குழு அமைக்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131